**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்**

**O.S.No.144/2025** **நாள்– 01.06.2026**

வாதி T.R.அழகர்சாமி யஷ்வந்த் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அவர் மூலம் இன்று சாட்சிய பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்யப்பட்டு வா.சா. 1 ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது ஏற்பாட்டின்படி கிரேடு 1 பெஞ்ச் கிளார்க் திரு.P.ஹரிகிருஷ்ணன், என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | T.R.அழகர்சாமி யஷ்வந்த் | தாலுகா | இராஜபாளையம் |
| த–பெ | திருப்பதிராஜ் | தொழில் | |
| கிராமம் | நல்லமநாயக்கன்பட்டி | வயது | 24 |

**முதல் விசாரணை**

எனது சாட்சிய பிரமாண பத்திரிக்கையை பொறுத்து முதல் விசாரணை வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும்.

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

1) 03.02.2025 ம் தேதியிட்ட எனக்கு எதிர்வாதி எழுதிக்கொடுத்த ரூ.10 லட்சத்திற்கான தாவா யாதாஸ்து (உறுதி மொழி ஆவணம் வரவு ஒன்றுமில்லை ) அசல் **வா.சா.ஆ.1**.
2) 12.05.2025 ம் தேதியிட்ட எதிர்வாதி பெயரிலும் மேற்படியாரின் சகோதரர்கள் பெயரிலும் உள்ள கூட்டு பட்டாக்கள் பட்டா எண்.6360, 6361 கணினி நகல் **வா.சா.ஆ.2**.
3) 13.04.2025 ம் தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் கணினி நகல் **வா.சா.ஆ.3**.
4) 14.10.2024 , 17.10.2024 பணம் செலுத்தியதற்கான வங்கி செலான் 2 எண்ணம் ஜெராக்ஸ் தாக்கல்.
5) என்னுடைய ஆதார் அட்டை உண்மை நகல் **வா.சா.ஆ.4**.
பிராதுப்படி தீர்ப்பாக வேண்டியது.

**குறுக்கு விசாரணை – இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 01st day of June 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.